DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 13/2020

List of Witness : Lw10

Prosecution Witness : PW5

| பெயர்: | ராஜேந்திரன் | ஜாதி: | |
|---|---|---|---|
| தந்தை / கணவர் பெயர் : | வேலுச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 13/07/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது அம்பிளிக்கை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சார்பு ஆய்வாளர்கள் சுந்தரவடிவேல், சேக்அப்துல்லா ஆகியோரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். வழக்கு கோப்பு மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 25.05.2019 ஆம் தேதி 5.30 மணியளவில் அம்பிளிக்கை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சுந்தரவடிவேல் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த தங்கராஜ் என்பவரிடம் புகாரை பெற்று 7.00 மணிக்கு நிலையம் வந்து குற்ற எண் 54/2019 பிரிவுகள் 294(பி), 323,506(1) இதச ஆக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார்தாரரின் புகாரையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்பந்தமப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு அன்றைய தினமே 8.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் விஜயகுமார், செல்வன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வைமகசர் தயார் செய்து சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.ச.வின் கீழ் வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். **பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.** பின்பு சாட்சிகள் தங்கராஜ், அழகர்சாமி, தனலட்சுமி, பொன்மணி ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து 161(3) கு.வி.மு.ச.வின் கீழ் வாக்கு மூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்பு எதிரியை தேடிவந்த நிலையில் கொசவப்பட்டி பஸ் நிறுத்தம் அருகே அன்றைய

தினம் 12.30 மணிக்கு எதிரியை காரணம் கூறி கைது செய்து மாண்பமை உச்ச நீதிமன்ற விதிமுறைகளை பின்பற்றி தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு சார்பு ஆய்வாளர் சேக்அப்துல்லா அவர்கள் இவ்வழக்கை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இவ்வழக்கில் காயம்பட்ட தங்கராஜ் என்பவருக்கு சிகிச்சை அளித்து சான்று வழங்கிய ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை மருத்துவர் சதீஸ்குமார் அவர்களிடம் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு அன்றைய தினமே முதல் கட்ட விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் சுந்தரவடிவேல் அவர்களை விசாரணை செய்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 14.10.2019 ஆம் தேதி இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) ஆக குற்ற இறுதியறிக்கை தயார் செய்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஒட்டன்சத்திரத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சொன்ன விதத்தில் சொன்ன மாதிரி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமலேயே காவல் நிலையத்தில் வைத்து வழக்கின் தோதுக்கு ஏற்ப பார்வை மகஜர் வரைபடம் ஆகிய ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் உண்மைக்கு மாறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.13 17:51:35 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 13/07/2026